உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

(மாத வெளியீடு)



திருப்புகழ் தொண்டன்

கிருபானந்த வாரி

...கழமிர்தம் காரியாலயம்,

...காங்கேயநல்லூர்.

...ARKER'S ENGRAVERS MADRAS

...ட சந்தா ரூ. 2 -0- 0.

SL
இ26ஊ211, N37J8
N48. 8.1.
189498

## பொருளடக்கம்.

**திருப்புகழ்**
விலக்கு மேனியி 195 கந்தர் திருவிளையாடல் 207
**கந்தரலங்காரம்** கற்பு 211
இழியும் படியடற் 202 திருக்குறள் 217
கந்தரநுபூதி 191—198

---

## நன்கொடை ரூபா நூறு.

நமது அமிர்தத்திற்கு இதுவரை உயர் கொடையாளராக இருந்தவரும், எனது அன்பிற் சிறந்தவரும் ஆகிய நாச்சிக்குறிச்சி உயர்திரு. C. துரைசாமி நாடார் அவர்கள் அமிர்தவளர்ச்சியின் பொருட்டு நூறு ரூபாய்கள் நன்கொடையாக அளித்தார்கள்.

இம் மஹா கோடையாளர்க்கு மிகுத்த கனமதுறு நீள் சவுக்ய சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வும், நீகைமை சிவஞானமும் உண்டாக இளம்பூரணனது இணையடி மலரை இறைஞ்சுகிறேம்.

ஆசிரியர்..

---

## தேவார அருள்முறைத்திரட்டு.

உமாபதி சிவாசாரியர் திரட்டியருளிய தேவார அருள் முறைத் திரட்டு திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் எழுதிய பதவுரை விளக்கவுரையுடன் கூடியது.

விலை ரூ. 1-0-0. தபாற்செலவு. ரிஜிஸ்ட்ரேஷன் உள்பட பிரதி 1-க்கு 0-7-0.

ஆறுபடைவீட்டுப்படம் கைவசம் கிடையாது.
பதில் விரும்புவோர் ரிப்ளைகார்டு அல்லது ஸ்டாம்பு அனுப்பினலல்லது பதில் தெரிவிக்க இயலாது.

திருப்புகழமிர்தம் ஆபீஸ்,
காங்கேயநல்லூர், (Via) காட்பாடி. N. A.

திருவருள் முன்னின்று முடித்த
நாடகமிது.

"முக்திக்குச் சுருக்குவழி பக்தி"
அதை விளக்கும்

நவாப்

## T. S. ராஜமாணிக்கத்தின்

## புதிய நாடகம்

# 'ஸ்ரீ ஐயப்பன்'

(உரிமை பெற்றது)

ஆலப்புழை பகவதி விலாஸில்
7-12-43 முதல் தினசரி நடைபெறும்.

பு
ரா
ண
ம்



பு
ண்
ணி
ய
ம்

## மதுரை தேவி பால விநோத

## சங்கீத சபா.

ஓம் குஹாய நம:

# "திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன், .... | ரூ. 2-0-0 |
| | தனிப்பிரதி கிடைக்காது. | |

1. சந்தாதாரராகச்சேருகின்றவர்கள், ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே மணியார்டர் அநுப்பவேண்டும். மணியார்டர் கூபனில் தங்கள் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதியநுப்ப வேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால், நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அநுப்பப் படும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

3. இதழ் கிடைக்கப்பெருத சந்தா நேயர்கள், அத் தமிழ்த் திங்கள் 10உ-க்குள் எழுதிப் பெறவேண்டும். அதற்குமேல் எழுதுவோர் பணஞ் செலுத்திப் பெறவேண்டும். இதழ் கிடைக்கப் பெருதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்க வேண்டும்.

4. விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரிவிக்கவேண்டும் இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அநுப்பப்படும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

## ஆண்டு மலர்கள்.

| | |
|---|---|
| ஈஸ்வர வருஷ மலர் | ரூ. 2-0-0 |
| பிரமாதி வருஷ மலர் | ரூ. 2-0-0 |
| விக்ரம வருஷ மலர் | ரூ. 2-0-0 |
| விஷு வருஷ மலர் | ரூ. 2-0-0 |
| சித்திரபாநு மலர் | ரூ 2-4-0. |

பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி (ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உள்பட)

ரூ 0-7-0.

மானேஜர்,

**திருப்புகழமிர்தம் காரியாலயம்,**

காங்கேயநல்லூர் *P. O. (Via)* காட்பாடி. *N. A.*

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ஸ்ரீஅப்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்"

| | | |
|---|---|---|
| மலர் 8. Vol 8. | சுபாநு ஹூ மார்கழி மீ 1உ<br>டிசம்பர் 1943 | இதழ். No. 9. |

## திருப்புகழ்

### திருக்கோணமலை.

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியே மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுலை
வெறுப்ப தாகியே யுழைத்தேவி டாய்படு கோடியேனைக்

கல்க்க மாகவே மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியே தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு மொருவாழ்வே

கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயேனை யருட்பார்வை யாகவே
கழற்கு ளாகவே சிறப்பான தாயருள் தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே
...மேழ்பவ கடற்றூறை யாகவே
... வேல்கொடு பொடித்தூள தாஎறி
நி... காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே.

பதவுரை.

... நாயக - மலைகளுக்குத் தலைவராக விளங்குபவரே! சிவகாமி நாயகர் — உமாதேவியாருடைய கணவராகிய சிவ பெருமானுடைய, திருக்குமாரனே - சிறந்த செல்வப் புதல்வரே! முகத்து ஆறு தேசிக — ஆறு திருமுகங்களையுடைய பரம குரு நாதரே! வடிப்ப மாது - அழகின்மிக்க பெண்ணரசியும், ஒரு - ஒப்பற்றவரும் ஆகிய, குற பாவையாள் - வள்ளியம்மையார், மகிழ்தரு வேளே - உள்ளம் உவந்து விரும்புகின்றவரே! வசிட்டர் — வசிட்டமுனிவர், தவத்து ஆன யோகியர் - தவத்திற் சிறந்த சிவயோகியர், அகத்யமாமுனி — பெருமைமிக்க அகத்திய முனிவர், இடைக்காடர் - இடைக்காடர், கீரனும் - நக்கீரதேவர் ஆகிய ஆன்றோர்கள், வகுத்த பாவினில் - வகுத்துக் கூறிய அருட் பாடல்களில், பொருள் கோலமாய் வரும் முருகோனே — பொருள் வடிவாகத் தோன்றும் முருகக்கடவுளே! நிலைக்கும் நால்மறை - என்றும் நிலைத்திருப்பனவாகிய வேதங்கள் நான்கிலும் வல்ல, மகத்து ஆன பூசுரர் - பெருமைமிக்க அந்தணர்கள் வாழுகின்ற, திருக்கொணமலை — திருக்கோணமலை என்ற, தலத்து ஆர் (உ - சாரியை) கோபுர நிலைக்குள் வாயினில் — திருத்தலத்தில் அருமையான கோபுரவாயிலுக்குள், கிளிப்பாடு பூதியில் - கிளிப்பாடு பூதியென்னும் இடத்தில், வருவோனே - எழுந்தருளி வருபவரே! நிகழ்த்தும் ஏழ் பவ கடல் - உயிரைத் தொழிற்படுத்துகின்ற எழுவகைப் பிறவிகளாகிய கடல்கள், சூறை ஆகவே - கொள்ளை போக, எடுத்த வேல்கொடு — திருக்கரத்து ஏந்திய வேலாயுதத்தைக் கொண்டு, பொடி தூளது ஆ எறி - மிகவும் பொடிபட்டு போமாறு எறிந்த, நினைத்த காரியம் - அடியேங்கள் எண்ணிய கருமங்கள், அநுகூலமேபுரி - அநுகூலமே யாகுமாறு (ஏ-தேற்றம்) அருள்புரிகின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! விலைக்கு மேனியில் - விலைசெய்யும் உடம்பில், அணிகோவை -

அழகிய மாலைகளும், மேகலை - மேகலை என்ற ஆபரணமும், தரித்த ஆடையும் - உடுத்த ஆடையும், மணிபூணும் ஆகவெ - இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களும் பூண்டு, மினுக்கும் மாதர்கள் இட காம மூழ்கியெ - மினுக்குகின்ற விலைமகளிரிடத்தில் ஆசைவைத்து அவ்வாசைக் கடலில் முழுகி, மயல் ஊறி - மயக்கத்தில் ஊறி, மிகுத்த காமியன் என - மிகுந்த விருப்பமுடையவன் என்று, பாருளோர் எதிர் நகைக்கவே - உலகில் உள்ளவர்கள் முன் நகைக்குமாறு, உடல் எடுத்தே - உடம்பெடுத்து, வியாகுல வெறுப்பது ஆகியெ - துன்புற்று அதனால் வெறுப்பையடைந்து, உழைத்தே விடாய்படு - மீளமீள உலக வாழ்வில் உழைத்து தாக முறுகின்ற. கொடியேனை - கொடியவனாகிய அடியேனை, கலக்கம் ஆகவெ - அறிவு கலக்கமுற்று, மல கூடிலே - மலக்கூடாகிய இவ்வுடம்புடன் கூடி, மிகு பிணிக்கு உள் ஆகியெ - மிகுந்த நோய்களுக்கு உள்ளாகி, தவிக்காமலே - தவியாமற்படிக்கு, உனை கவிக்குளாய் சொலி - தேவரீரை தமிழ்க் கவிதைகளைச் சொல்லி, கடைதேறவே செயும் - ஆவி யீடேறுமாறு செய்தருளிய, ஒரு வாழ்வே - நிகரற்ற வாழ்வாக விளங்குபவரே! கதிக்கு நாதன் நி - பரகதிக்குத் தலைவர் நீரே; உனை தேடியே - தேவரீரைத் தேடி, புகழ் உரைக்கும் நாயேனை - திருப்புகழ் பாடும் நாயேனை, கழற்குள் ஆகவே - தேவரீருடைய திருவடிக்குள்ளாகுமாறு, சிறப்பு ஆன - சிறந்ததாகிய, தாய் அருள் - தாயின் கருணையையொத்த திருவருளை, தரவேணும் - தந்தருள்வீர்.

## பொழிப்புரை.

மலைகளுக்குத் தலைவரே! உமையம்மையாருடைய கொழுநராகிய சிவபெருமானுடைய திருப்புதல்வரே! ஆறு திருமுகங்களையுடைய குருநாதரே! ஒப்பற்ற அழகின் மிக்க வள்ளியம்மையார் விரும்பி மகிழும் மணவாளரே! வசிட்டர், காசிபர், தவத்திற் சிறந்த சிவயோகியர், பெருமையின் மிக்க அகத்திய முனிவர், இடைக்காடர், நக்கீரதேவர் ஆகிய அறிவான்ற பெரியோர்கள் வகுத்துப் பாடிய பாடல்களில் உட்பொருள் வடிவமாகத் தோன்றுபவரே! நிலத்துள்ள. வேதங்கள் நான்கையும் ஓதி யுணர்ந்த சிறந்த அந்தணர்கள் வாழுகின்ற திருக்கோணமலை யென்னும் திருத்தலத்தில் விளங்குகின்ற கோபுரவாயிலில் கிளிப்பாடு

பூதி யென்னும் இடத்தில் எழுந்தருளி யுள்ளவரே! (ஆன் மாவை இங்கு மங்குமாக) தொழிற்படுத்துகின்ற தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, விலங்கு, மனிதர், தேவர் என்ற எழுவகைப் பிறவிகளாகிய ஏழுகடல்களும் புழுதி பட்டுக் கொள்ளும்போக வேலாயுதத்தை விடுகின்றவரும், நினைத்த காரியங்களை அநுகூலமே புரிந்தருளுகின்றவரும் ஆகிய பெருமையின் மிக்கவரே! விலைசெய்கின்ற உடம்பில் அழகிய மாலைகள் உடுக்கின்ற ஆடை இரத்தினுபரணங் கள் இவைகளை யணிந்து மினுக்குகின்ற விலைமகளிரிடத் தில் காமுற்று மயக்கக்கடலில் முழுகி அதிலேயே ஊறி மிகுந்த விருப்பினனென்று உலகிலுள்ளோர் சிரிக்குமாறு உடம்பெடுத்து துன்ப மிகுதியால் வெறுப்புற்று உலக மாயையில் உழைத்து அநிதாகமுற்ற கொடியவனுகிய அடியேனை, அறிவு கலக்குற்று மலபாண்டமாகிய உடலு டன் கூடி மிகுந்த நோய்வாய்ப்பட்டு தவிக்காமற்படிக்கு தேவரீரைத் தமிழ்க்கவிபாடி கடைத்தேறச் செய்தருளிய எம்பெருமானே! தேவரீரே முத்தி உலகிற்குத் தலைவர்; உமது திருவடியையே தேடி திருப்புகழ் பாடுகின்ற அடி யேனை திருவருட் பார்வையாகப் பார்த்து உமது சரணர விந்தங்களுக்கு ஆளாகுமாறு சிறந்த தாயருளைத் தந்து ஆட்கொள்வீர்.

## விரிவுரை.

**விலைக்குமேனியி.........மயலூறி:—**

விலைக்குமேனி என்பது விலைபடுத்துகின்ற மேனி என் பது கருத்து. மேகலை என்பது இடையில் பெண்களணியும் ஓர் ஆபரணம். மினுக்குமாதர் - விலைமகளிர். "விலைமகட் கழகு தன் மேனி மினுக்குதல்" என்பது நறுந்தொகை. விலைமாதரிடத்தில் விருப்பத்தை வைத்து அவர்களது ஆசைப் பெருங்கடலுளாழ்ந்து அதிலேயே ஊறிக்கொண் டிருத்தல்.

**மிகுத்த காமியன்..........கோடியேனை:—**

உலகத்தவர்கள் இவன் "மிகுந்தகாமி" என்று எள்ளி

நகையாட சிறிதும் நாணமின்றி உலாவியும், அதனால் மிகுந்த வியாகுலமுற்றும், நல்ல விஷயத்தில் வெறுப்புற்றும், குடும்பத்திற்காகவும் வயிற்றுக்காகவும் உழைத்து உழைத்து அருள்தாக மடையாமல் காமதாகமடைந்து தடுமாறி விலைமதிக்க முடியாத மாணிக்கமாகிய வாணாளை வீணாக்குவதை சுவாமிகள் வெறுக்கின்றனர்.

உனை கவிக்துளாய்சோலி கடைத்தேற வேசெயு:—

செந்தமிழ்ப் பரமாசிரியராகிய செவ்வேட் பரமன் அருணகிரியார்க்கு அருட்கோலங் காட்டி, "அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப் பொழுதில் வாழ்வித்து" "நம் திருப்புகழைப் பாடுதி" என்று பணித்தருளினன். அருணகிரிநாத சுவாமிகள் கடல் மடைதிறந்த வெள்ளம்போல், வேதாகம புராணேதிகாசக் கருத்துக்களை யெல்லாம் அமைத்து, தொனிக்கு இனிப்பதும், சித்தத்தில் சிந்திக்குந்தொறும் தித்திப்பதும், நினைத்தது மளிப்பதும், கருங்கல் மனத்தையும் கரைந்துருக்குவதும், கருவறுத்துப் பிறவாத பெற்றியை எளிதில் தருவதுமாகிய பதினாறாயிரந் தமிழ்வேதத் திருப்புகழ் பாடல்களைப் பாடியருளினார்.

"பாதபங்கய முற்றிட வுட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமன்பது செய்ப்பதியில் தந்தவனீயே"

"அற்புதத் திருப்புகழ்
தேனூற வோதி எத்திசைப் புறத்தினும்
ஏடேவு ராஜதத்தினைப் பணித்ததும் மறவேனே"
—திருப்புகழ்

கதிக்கு நாதனி:—

கதிக்கு நாதன் நீ. நீ என்பது குறுகல்விகாரம் பெற்றது; கதி - முத்தி. முத்திஉலகிற்கு முதல்வன் முருகக் கடவுளே. பரகதியும் அவரே.

"தெரிசன பரகதி யானாய் நமோநம"

தாயநுள் தரவேணும்:—

தாய் மகவினிடம் காட்டுங் கருணை நிகரற்றது; பயன் கருதாதது; இறைவனுடைய கருணைக்கு ஏகதேச உவமையாக உள்ளது. இறைவனைப் "பொன்னே மணியே" என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

"பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே"

என்பது அநுபூதி. இறைவன் பொன்னினும் மணியினும் பல்கோடிமடங்கு சிறந்தவர். எனினும் நமக்குத் தெரிந்த பொருள்களுக்குள் பொன்னும் மணியும் சிறந்தன. ஆதலினால் நாமறிந்த பொருள்களுக்குள் உயர்ந்தவற்றின் பேரால் இறைவனை யழைக்கின்றோம். அதேபோல் ஆண்டவன் வரம்பற்ற கருணை யுடையவர். நமது வாழ்வில் நாம் அறிந்தவற்றுக்குள் தாயன்பு சாலச் சிறந்தது. ஆதலினால் ஆன்றோர்கள் இறைவன் கருணையைக் குறிப்பிடும்போதெல்லாம் தாயின் கருணையைக் குறிப்பிடுவர்.

"பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து"
"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"
"தாயினும் நல்லன்"
"ஆய்புரி அருட்செறிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே"
"தாய்போ லடியார் தமைப்புரப்பார்"

மலைக்குநாயக:—

குமாரக்கடவுள் குறிஞ்சிநிலக் கடவுள்.

"சேயோன் மேய மைவரை யுலகும்"
—தொல்காப்பியம்.

"குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே"
—அலங்காரம்.

முருகவேளின் முழுமுதற் றன்மையை யறிந்த பண்டைத் தமிழர்கள், உயர்ந்தவனை உயர்ந்த இடத்தில் வைப்பது போல், மயிலேறும் வள்ளலை மலைமிசை வைத்து வணங்கினர்.

வசிட்டர்.........போருட்கோல்மாய்வரும்:—

வசிட்டாதி முனிவர் பெருமக்களும், நக்கீரராதி நாவலரேறுகளும், சித்தர் யோகியர்களும் முருகவேளைப் பாடிப் பரவி வழிபட்டு அருணலமுற்றனர்கள்.

சிவவாக்கியர் வழிபட்ட சிவமலையும், பிண்ணாக்கு சித்தர் வழிபட்ட சென்னிமலையும், பாம்பாட்டிச் சித்தர் வழிபட்ட மருதமலையும், போகர் வழிபட்ட பழநிமலையும், கொங்கணசித்தர் வழிபட்ட கொங்கணகிரியும், அகத்தியர் வழிபட்ட இலஞ்சிப்பதியும், வசிட்டர் வழிப்பட்ட வேப்பூரும் இன்றும் கண்கூடாகக் கண்டு மகிழ விளங்குகின்றன.

திருக்கோணமலை:—

இது ஈழநாட்டிலுள்ள அரிய திருத்தலம்.

கிளிப்பாடுபூதி:—

அத் தலத்தின் திருக்கோயிலிலுள்ள ஓரிடமென்பர். இனி, அருணகிரியார் கிளிவடிவமுற்று கந்தரநுபூதி பாடினர் என்னும் வரலாறுண்மையில், வருங்காலத்தைச் சுட்டி அங்ஙனம் பாடினார் என்றும் கூறுவர்.

ஏழ்பவகடல்:—

எழுவகைப் பிறவிகளையும் ஏழு கடல்களாக அருணகிரிநாதர் உவமிக்கும் அழகு சிந்திக்கத்தக்கது.

"தரையி னுழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடி"

—திருப்புகழ்.

கருத்துரை.

மலைமன்ன! சிவமைந்த! வள்ளிமகிண! அருட்பாக்களின் போருட்கோல! திருக்கோணமலைத்தேவ! நினைத்தவை முடிக்கும் நெடுஞ்சுடர்வேல! மாதர் மயக்குற்ற அடியேனை ஆட்கொண்ட அண்ணல்! புகழுரைக்கும் அடியேனை திருவடிப் பேறு தந்து தாயருள் புரிந்து காப்பாற்றுவீர்.

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(184-ம் பக்கத் தொடர்ச்சி)

(56) கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

## பதவுரை.

அடல் குன்று - வலிமையுடைய கிரௌஞ்ச மலையானது, கிழியும்படி - பிளந்தொழியுமாறு, எறிந்தோன் - வேலாயுதத்தை விடுத்தருளியவராகிய முருகப்பெருமானுடைய, கவிகேட்டு உருகி - அருட்பாடல்களைச் செவிகுளிரக் கேட்டு உள்ளம் உருகி, இழியும் கவி - ஏனைய இழிந்த பாடல்களை, கற்றிடாது இருப்பீர் - கற்காமல் இருப்பீர்களாக; எரிவாய் நரக குழியும் - நெருப்புடன் கூடிய நரகக் குழியையும், துயரும் - அதனால் அனுபவிக்கக்கூடிய துன்பத்தையும், விடாய்பட - நீர்விடாய்கொண்டு தவிக்க, கூற்றுவன் ஊர்க்கு செல்லும் வழியும் - இயமனுடைய ஊருக்குப் போகின்ற கொடிய வழியையும், துயரும் - அதனா லுண்டாகுந் துன்பத்தையும், மறந்தவர்க்கு - மறந்த அறிவிலிகட்கு, [பகரீர் பகரீர் - சொல்லுங்கள்; சொல்லுங்கள்.

## விரிவுரை.

### கிழியும்படியடற் குன்றெறிந்தோன்:—

கிரௌஞ்சம் என்பது ஒரு பறவை. தாரகனுக்கு நண்பனாகிய ஓரசுரன் பெரிய மாயாவி. அவன் அப்பறவை போன்ற மலைவடிவத்தைக் கொண்டு தேவர்களையும் முனிவர்களையும் தனதிடத்தில் வழியுளதுபோல் காட்டி அவர்கள் அவ்வழி செல்லுங்கால் அவர்கள் அறிவை மயக்கி

அழிப்பன். அகத்திய முனிவரை அவ்வாறு அவன் ஒரு சமயம் துன்புறுத்த முயன்முன். அம் மாதவ சிகாமணி சினந்து, மலைவடிவாகவே இருக்குமாறும் கந்தப்பெருமான் கைவேலால் அழியுமாறும் சாபங் கொடுத்தனர். அதனுல் அப் பாதகன் மலையுருவுடனேயே இருந்து அவ்வழியே செல்லும் இமையவரையும் இருடியரையும் இடர்ப் படுத்திக் கொண்டிருந்தான்.

பின்னர் முருகவேளின் துணைவர்களாகிய இலக்கத் தொன்பான் வீரர்களையும் பூதசேனுதிபதிகளையும் தன்னிடத்தே வழிபோற் காட்டி, அவர்கள் அதில் நுழைதலும் வழியை மறைத்து, இடி மழை காற்று இருள் ஆகியவற்றை யுண்டாக்கி மயக்கினுன். அதனை யுணர்ந்த ஆறுமுகப் பெருமான் தமது திருக்கரத்துள்ள நூறுகோடி சூரியப்பிரகாச முடைய வேற்படையை விடுத்து கிரௌஞ்சமலையைத் துகள்படுத்தி யழித்தனர். அதில் மயங்கிய வீரர்களும் உய்வு பெற்றனர். அதனுல் குமாரக் கடவுளுக்கு "வரைபக வெறிந்தோன்" என்ற திருநாமம் உண்டாயிற்று.

நக்கீரதேவரையும், தொளாயிரத்துத் தொண்ணூற் ருென்பான் மனிதரையும் கற்கிமுகி யென்ற பூதம் மலைக்குள் சிறைப்படுத்தியது. நக்கிரதேவர் திருமுருகாற்றுப் படை பாடுதலும் முருகவேள் வேற்படையால் கற்கிமுகி யையும், அம் மலையையும் பிளந்தருளினுர்.

கவிகேட்டுருகி:—

கிரௌஞ்சம் என்பது ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் ஆகிய வினைத்தொகுதிகள். அவற்றை வேல் அழித்தது.

"வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்"

ஆதலால் வினைத்தொகுதிக ளாகிய மலைகளை உடைத்தெறிந்த ஞானவேலையுடைய முருகப்பெருமானுடைய திருவருட்பாடலாகிய திருப்புகழைக் காதுகுளிரச் சதா

கேட்டு, கருங்கல் போன்ற மனம் கரைந்துருகி நிற்க வேண்டும். அங்ஙனம் உருகுவார்க்கு இருவினையால் வரும் இடர்கள் வாரா. அவற்றை ஆண்டவன் அகற்றி அருள் புரிவன்.

உருகு மடியவர் இருவினை இருள்பொரும்
உதய தினகர இமகரன் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு பெருமாளே.
— திருப்புகழ்.

சீரானைப் பிறவானைச் சேவலனை மஞ்ஞைத்
தேரானைப் போற்றலர்க டேரானை யெம்முள்
நீரானை யளத்தற்கு நேரானைப் பொய்யிற்
சேரான்சீர் கேளாத செவியென்ன செவியே.

செவ்வேளின் சீர்கேளாச் செவியென்ன செவியே.
— நா. கதிரைவேற் பிள்ளை யவர்கள்.

இறைவனுடைய அருமைப் புகழ்ப்பாடலைக் கேட்பதனால் அன்பு உண்டாகும். அன்பினால் அகங்குழைந்து உருகும். அங்ஙனம் உருகுவார் இறைவனை எளிதிலடைவர்.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டு
பொன்போன் மேனியைப் பொறிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியை எய்த வொண்ணாதே.
—அப்பர்.

இழியுங்கவி கற்றிடா திருப்பீர்:—

இழியுங்கவி என்றது செத்து செத்துப் பிறக்கின்ற ஏனைய தேவர்களையும், தனவந்தர்களையும், மாதர்களையுங் குறித்துப் பாடிய பாடல்கள். இன்றிருந்து நாளை அழிகின்றவரும் கொடுங்குணங்களுக் கெல்லாம் உறைவிடமானவரும் உலோபருமாகிய மனிதர்களைக் குறித்து எழுந்த பாடல்களையும், புலால் உடம்புடன் கூடி நாறுகின்ற வாயையும் கண்ணையும் காதையும் வெறுந் தசைத் திரட்சியையும் உயர்த்தி உயர்த்தி எழுந்த பாடல்களையும் கற்றுப் பாடுவோர் எங்ஙனம் சிவகதி பெறுவர்? அந்தோ!

அறிவின்மை. இறைவனது ஞானத் திருமேனியைப் புகழ்ந்து பாடாமல், ஊன உடம்பைப் புகழ்ந்து பாடியழிவர். அவலை மெல்லாது உமியை மெல்லுபவரையும், கரும்பிருக்க இரும்பைக் கடிப்பவரையும் ஒப்பர்.

பாலென்பது மொழி பஞ்சென்பது பதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீ செந்தி லோன்றிருக்கை
வேலென் கிலை கொற்ற மயூரமென்கிலை வெட்சித் தண்டைக்
காலென் கிலை மனமே எங்ஙனே முத்தி காண்பதுவே.

—அலங்காரம்.

மேகமென்றும் கொடிப்பாசி யென்றும் கருமணலென்றும் கூறிய அளகம் பஞ்சுபோலவும், சேல் வேல் தாமரை நீலோற்பலம் என்றெல்லாம் கூறிய கண்கள் துயிர் பிதிர்ந்ததுபோல் பீளையுடன் குழிந்து போகவும் பிற உறுப்புக்களும் இங்ஙனமே எழிலழியும்; நிலையில்லாதவற்றை நிலையென்று புகழ்ந்தழிதல் கூடாதென்று சுவாமிகள் பலவிடத்துங் கூறுமாறு காண்க.

எரிவாய் நரகக் குழியும் துயரும்:—

கொலை, புலை, களவு, பிறன்மனை விழைவு ஆகிய பாவங்களைச் செய்தவர்கள் இயமனுடைய ஆட்களால் மிகவும் கொடுமையான நெருப்புடன் கூடிய நரகக் குழியில் வீழ்ந்து துன்புறுவர்.

ஊனை வளர்க்கும் பொருட்டு பிறிதோருயிரைக் கொன்று சிறிதுங் கருணையின்றி ஊனை யுண்ணும் வன்கணரை இயமன் நரகில் துன்புறுத்துவன் என்பதைத் திருமூலர் கூறுமாறு காண்க.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.

தன் மனைவியை ஒருவன் உற்று நோக்கினும் உள்ளங் கொதிக்கின்றதல்லவா? பிறன் மனைவியை நோக்கினும்

அவன் உள்ளம் கொதிக்குமே என்ற பகுத்தறிவின்றி பிறன்மனை விழையும் பேதையர் நரகில் அழலிற் காய்ந்த செப்புருவைத் தழுவி யலறுவர்.

காதலாள் கரிந்து நைய வடியவே கனைந்து கன்றி
ஏதிலான் தார நம்பி எளிதென இறந்த பாவத்
தூதுலை யுருக வெந்த ஒள்ளழற் செப்புப் பாவை
ஆதகா தென்னப் புல்லி யலறுமால் யானைவேந்தே.

—சிந்தாமணி.

சிறியபயன் கருதி தீமைகளை நெஞ்ச மஞ்சாது செய்து, நினைக்கினும் நெஞ்சைச் சுடுகின்ற தீவாய் நரகில் வீழ்ந்து துன்புறுவோர் பேதைமையை என்னென்பேம்!

விடாய்ப்படக்..........செல்லும் வழியும்:—

தண்ணீர்ப் பந்தல் வைத்து ஏழைகட்கு உதவிய புண்ணிய சிலர் ஆவி பிரியுங்கால் அமிர்த சரஸுடன் கூடிய குளிர் நிழல் வழியே செல்லுவர். ஏழைகட்குத் தண்ணீர் கூடத் தராத கொடும்பாவிகளுடைய ஆன்மாவை இயம தூதர் தண்ணீரில்லாததும் நொய் மணலுடன் கூடிய வெய்யிலிலும், கல்லும் முள்ளுமான கடும்வழியில் "தண்ணீர் தண்ணீர்" என்று அலற இழுத்தேகுவர்.

கொல்வதே கன்றி நின்றார் கொடியவர் கடிய நீரார்
இல்லையே யிம்மை யல்லா லும்மையு முயிரு மென்பார்
அல்லதுந் தவமு மில்லை தானமு மிழவென் பாரும்
செல்பவந் நரகந் தன்னுட் டீவினைத் தேர்க ளூர்ந்தே.

—சிந்தாமணி.

பகரீர் பகரீர் மறந்தவர்க்கே:—

ஆதலால், இயமனுடைய ஊர்க்குப்போகும் வழியும் துயரும், நரகக் குழியும் துயரும் நிச்சயமாக உண்டென்பதை, செல்வச் செருக்காலும் இளமை முறுக்காலும், அதிகாரத் திமிராலும் மறந்து மயங்கி "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று அல்லவை புரியும் அறிவிலிகட்கு உள்ளந் திருந்துமாறு எடுத்து இடித்துச்

ஓம் குஹாய நம

# கந்தர் திருவிளையாடல்

பண்டைக்காலத்தோர்நாள், செந்தமிழ்ப் புலவரும், அந்தண்மா முனிவரும் கூடி ஓர் ஞானவேள்வி புரிந்தனர், அதன் முடிவிலே ஆங்கு வித்வ தாம்பூலங் கொடுக்க நேர்ந்தது. "சிறந்த புலவர் யாவர்? முதற்றாம்பூலம் எவர்க்குத் தருவது?" என்ற ஆராய்ச்சி யுண்டாயிற்று. அங்கிருந்தோரனைவரும் ஏகமனதாக "ஔவையாரே அதற்குரியார்" எனத் தீர்மானித்தனர். அவர்தகுதியே அதற்குக் காரணம். அவர் துங்கக்கணபதியை வழிபட்டு சங்கத்தமிழ் மூன்றும் பெற்றவர்; கானத்தில் கானமயில்வீரராங் கந்தக்கடவுள் காரெருமை மேய்ப்பான்போல் நாவல்மரத்தில் தோன்றி "சுட்டபழம் வேண்டுமோ? சுடாதபழம் வேண்டுமோ?" என்று கேட்டு கலாவிநோதஞ் செய்யப் பெற்றவர்; பாண்டியன் அவைக்களத்தில் நாட்டப்பட்ட பொற்சங்கிலி யறுமாறு பாடியருளியவர்; அதிகமானெடுமான்வஞ்சி தந்த கருநெல்லிக்கனியுண்டு நீண்ட ஆயுள் பெற்றவர்; "கலைமகளின் திருவவதாரம்" என்று கற்றவரும் மற்றவரும்

---

"சொல்லுங்கள்; சொல்லுங்கள்;" என்று இருமுறை கூறி வற்புறுத்துகின்றனர்.

அறவுரைகளை வற்புறுத்திக் கூறுதல் ஒரு பேரறமாகும்.

## கருத்துரை.

உலகீரே! அவகவிகளைக் கல்லாமல் சிவகவிகளைக் கற்று உய்மின்; அங்ஙனங் கற்று உய்யுநெறி யறியாதார் வெய்ய நரகுறுவர். இவற்றை மறந்தவர்க்கு வற்புறுத்திக் கூறுங்கள்.

புகழ்ப்பெற்றவர் ஆகிய இன்னோரன்ன வண்புகழுடைய தன்[illegible]யைப் பணிந்து, "அம்மே! வித்வமுதன்மைத் தாம்பூலத்தை ஏற்றருள்க" என்று நீட்டினர்.

செவ்வைகூர் ஔவையார் அன்னவரை நோக்கி, "அன்பரீர்!

**கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்**
**றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — மெத்த**
**வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்**
**எறும்புந்தன் கையா லெண்சாண்.**

ஒன்றுக்கும் பற்றாத யானோ இது பெறற் குரியள்? நன்று நன்று. புலவர்களாகிய தேவர்கட்கெல்லாம் அறிபனும், ஐந்திர வியாகரணத்தைச் செய்தவனும், மன்னுயிர்கட்கெல்லாம் இனிய மழையைப் பொழிவிப்பவனும் ஆகிய இந்திரனே இத் தாம்பூலம் பெறுவதற் குரியவன்; ஆதலால் அமரர்கோமானுக்கே இதனைத் தருமின்" என்றனர்.

அதுகேட்ட அவர்கள் சுவர்க்கலோகஞ் சென்று, நிகழ்ந்ததுரைத்து தாம்பூலத்தை நீட்டினர். இந்திரன் நடுங்கி, "ஐயகோ! யானோ இதுபெறுதற் குரியவன்? என்னினுஞ் சிறந்த புலவர் ஒருவருளர்; பொதியமலையில் வாழும் புனிதராம் அகத்தியமுனிவரே அவர். முருகவேளிடம் தமிழும் ஞானமும் பெற்றவர்; தென்கோ டுயர்ந்தபோது சிவமே யென பொதிகையில் அமர்ந்தவர்; முதற் சங்கத் தலைவராய் வீற்றிருந்து அகத்திய மென்னும் முதல் நூலைச் செய்தவர்; எழுகடல்களையும் குடங்கையா லெடுத்துப் பருகியவர்; மூதண்டகூடம்முட்ட வளர்ந்த விந்தமலையைப் பாதலத்தில் அழுத்தியவர்; மெய்த்தவ சீலராம் வித்தகமூலர். ஆதலின் அருந்தவமணியாம் அவரிடம் கொண்டுபோய் நல்குமின்" என்றனன்.

அவர்கள் அங்ஙனமே பொதியாசலம் புக்கு, குறுமுனிவராம் திருமுனிவர் திருவடி தொழுது நிகழ்ந்தவை கூறி தாம்பூலத்தை நீட்டினர். அக்கத்தியர் அஞ்சி "ஆர்வலரீர்!

யான் இதற்குத் தகவுடையே னல்லன். ஆயகலைகள் அறு பத்து நான்கினையும் ஏய வுணர்விக்கும் இறைவி சரஸ் வதியே இது பெறுவதற்குரியவர். அவரே சகலகலாவல்லி. புலவர்கள் நாவிலிருந்து தவழ்ந்து விளையாடும் தனிப்பெரு முதல்வியாம் அவ் வம்மையிடம் சென்று வழங்குமின்'' என்றனர்.

உடனே யாவரும் சத்தியவுலகஞ் சென்று, வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் வாணிதேவியை முறைப்படி வணங்கி, நிகழ்ந்தவை யாவுங் கூறி தாம்பூலத்தை யளிக்கலுற்றனர். கலைமகளார் அதுகண்டு நடுக்குற்று ''அம்மவோ! இதனைப் பெறத்தக்கவள் யானோ? ஞான சொரூபியாயும், ஞானம் பிகையுமாகிய உமாதேவியாரே இது பெறுவதற் குரிய வர்'' என்றருளினர்.

அவ்வினிய வுரைகளைக் கேட்ட அனைவரும் திருக் கயிலைமலை சென்று திருநந்திதேவரிடம் விடைபெற்று திருக்கோயிலுட் சென்று அம்மையப்பராகிய உமை யம்மையாரையும் சிவபெருமானையும் பக்தி பரவசராகிப் பலகாலும் பணிந்து பரவி, ''அகிலாண்டகோடி யீன்ற அன்னையே! இதனைப் பெற்றுக்கொள்வீர்'' என்று நிகழ்ந் தன கூறி குறையிரந்து நின்றனர். வேதாகமங்களுக்கு மெட்டாத மெய்ஞ்ஞானத் தாயாகிய கருணம்பிகை கழ றும். ''குழந்தைகாள்! எமது கணவருக்கும் ஞானகுருவாக விளங்கும் முருகனே இதனைப் பெறுவதற் குரியவன். சர்வ பரிபூரண ஞானமூர்த்தி அவனே யாவன்; தலைச்சங்கத்தில் தலைமைபூண்டவன்; அகத்தியனுக்குச் செந்தமிழைச் செவியறிவுறுத்தியவன்; களவியலின் மெய்யுரையைக் காட்டியவன்; நக்கீரனாதி நல்லிசைப் புலவர்களது முத் தமிழ் கேட்டு கருணைபுரிந்த முழுமுதல்; ஞானபூரணசத்தி வேலாயுதன்; வேதனாகிய விதியைப் பிரணவார்த்தங் கேட்டு குட்டிச் சிறையிருத்துங் கோமான்; ஆயிரம் மறை களாலும் ஆகமங்களாலும் அளக்கற் கரியவன்; சகலகலா

சிரியன்; சர்வபரிபூரணன்; ஆதலின் அவனிடஞ் சென்று அளிப்பீராக" என்று அருளினர்.

அங்ஙனமே யவர்கள் எந்தை கந்தவேள் எழுந்தருளி யிருக்கும் கந்தவுலகம் போய் வீரவாகுதேவரிடம் விடை பெற்று பொற்கோயிலுக்குள் புகுந்து,

நாகநா யகனை யாண்ட ஞானநா யகனே போற்றி
யோகநா யகனே போற்றி யோகியர்க் கரசே போற்றி
யாகநா யகனே போற்றி யாவர்க்கு மரியாய் போற்றி
ஏகநா யகனே போற்றி இறைவனே போற்றி போற்றி.

என்று துதிசெய்தனர்; பாதபங்கயமேல் விழ்ந்து பணிந்தனர்; பரவினர். நிகழ்ந்தன கூறி வித்வ முதன்மைத் தாம்பூலத்தை நீட்டினர். ஞானபண்டிதராகிய எமது குமாரபரமேஸ்வரர் புன்னகை புரிந்து "ஏற்றுக் கொண் டேம்" என்று அருள்புரிந்தனர். குறிப்பறிவதில் வல்லவ ராகிய வீரவாகுதேவர் வந்து அதனை எடுத்தனர். ஆதலின் அமரர் போற்றுங் குமரநாயகனே சகலகலா வல்லபர் என் பது குன்றின்மேல் விளக்காகத் தெற்றெனை விளங்கியது.

புலவீரென் றனையழைத்தீர் புரந்தரனே யெனவவனும்
போதிகை வெற்பின்
இலகியகோ முனிபுலவ னென்றலுமே யவனுங்கேட்
டிரங்கி நின்று
கலைமகளாம் புலத்தியெனக் கலைமகளுங் கருத்தழிந்து
கௌரி யென்ன
மலையரசன் மகள் புதல்வன் சரவணவேள் முதல்வனென
வகுத்தா னன்றே.



# கற்பு.

செல்வபுரி என்ற அந்த நகரம் அளகாபுரிபோல் வளனும் நலனும் வாய்ந்து பொலிந்தது. மறையொலியும் மங்கலப்பாடல் நிறையொலியும் குறைவறக் குரைகடல்போல் முழங்கிக் கொண்டிருந்தன. அந்நகரத்தை அபயன் என்ற அரசன் அற நெறி வழுவாது அரசு புரிந்தனன். அமரர்கோமானே என்று அனைவரும் புகழ அம் மன்னன் அருளாட்சியும் பொருளாட்சியும் பொருந்தி நின்றனன். அவனுடைய புகழொளி பூதலமெங்கும் பரவி ஒளி செய்தது. அவன் காலத்தில் கரவு, சூது, வாது, மடி, மிடி, புலை, கொலை ஆகிய தீயவை மாய்ந்தொழிந்தன. அபயன் கலைகளை வளர்ப்பதிலும், கலைவாணர்களை யாதரிப்பதிலும் மிக்க ஊக்கமுடையவனாகி கல்விக்கு ஆக்கத்தைத் தேடிக்கொண்டிருந்தான். அவனுடைய அரசவையை பல அறிவின்மிக்க அரும்பெரும் புலவர்கள் இருந்து அலங்கரித்தனர். அதனால் அந்த அவை அறிவு வெள்ளம் பொங்கித் ததும்பிக் கரைபுரண்டு ஓடி அறியாமையாகிய புழுதிகளைக் கழுவ அழகு கொழித்துக்கொண்டிருந்தது. அப்புலவர் பெருமக்களுக்குத் தலைவராகவும், தண்ணிய அளியும் புண்ணிய நெறியும் உடையவராகவும் விளங்கியவர் அறிவாகரர் என்பார். அவர் அருங்கலை விநோதர். கலையறிவால் நிலையறிவு பெற்றவர். கல்வியின்பயன் அறிவு என்பதனையும், அறிவின் பயன் ஒழுக்கம் என்பதனையும் நன்குணர்ந்தவர். ஒழுக்கம் உயிரினும்உயர்ந்ததென உறுதிசெய்தவர். அறிவுவேறு ஒழுக்கம்வேறு என்று எண்ணி கல்விகற்று, சொல்வேறு செயல்வேறாக நடக்கும் புலவர்களைப் புல்லவராக நினைந்து ஒதுக்குபவர். கற்றலும் கற்ற வண்ணம் நிற்றலுமே தனது உயிர்க் கொள்கையாகக் கொண்டவர்.

இத்தகைய அறிவாகரருக்கு அறிவின் கொழுந்துபோல் வாய்த்த மனைவியார் போற்றுதற்கேற்றவர். அவர் பேர் மதிநிறைச்செல்வி கற்பு என்னும் பொற்பினால் கவின் பெற்றவர்;

மனையறத்தில் தினையளவுந் திறம்பாதவர்; அறிவின் மாட்சியும் அழகின் காட்சியும் அமைந்தவர். பெண்ணலமென்னும் விண்ணிடை தண்ணிலாப்போல் தகைபெற மிளிர்ந்தனர். இத்தகைய மடமங்கையை மனைவியாகப் பெற்ற அறிவாகரருக்குப் பெறத் தகாதது மூவுலகிலும் இல்லை. அவருடைய வாழ்க்கையாகிய கப்பல் இன்ப அலைவீசும் அன்புக்கடலில் தடையின்றி தவழ்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள், மதிநிறைச் செல்வி தாய்வீடு செல்லுதற்குரிய அவசியம் ஏற்பட்டது. அவருக்குக் கணவனைப் பிரிவதில் அளவற்ற வருத்தம் உண்டாகியது. நீரைவிட்டுப் பிரியும் மீன்போல் துடித்தனர். ஸ்ரீராம மூர்த்தி சீதாதேவியை நோக்கி, "நீ அயோத்தியிலேயே இரு; காடு சூடு நிறைந்தது. கருத்தையுஞ் சுடவைக்கும் கடுமையானது" என்றபோது, சீதாபிராட்டியார் அவ் வெஞ்சொல் செவிசுடத் தேம்பியழுது, "பெருமானே! நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு" என்றுகூறிய திருமொழியைஎண்ணி கருவிழியில் புனல் மழைபொழிந்தனர். செல்லவேண்டிய முக்கியம் பெரிதாக இருந்ததால், கணவனைத்தழுவி, திருவடிதொழுது தழுதழுத்தகுரலுடன் "என்னுடையன்பே! போய் இரண்டு மூன்று நாட்களில் திரும்பிவருவேன்" என்றுகூறி, நீர் நிறைந்த கண்களால் அன்பொழுகப் பார்த்து பிரியாவிடை பெற்றுச் சென்றனர். பலமுறை கணவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போயினர். அக்காட்சி அருகேயிருந்த கல்லையும் மண்ணையுங்கூட உருகச்செய்தது. தன் மனைவியின் தலையன்பை எண்ணி அறிவாகரரும் நிலைகுலைந்தனர்.

காளத்திமலையிலே கண்ணப்பர் என்னுந் திண்ணப்பர் சிவலிங்கத் திருமேனியைக் கண்டு, கரைகடந்த காதலுற்று ஐயன் பசிக்கு உணவு அமைத்துத்தர வேண்டுமென்றெண்ணி, பிரியமன்றியிருந்தும் அவர் பசிபோக்கும் பொருட்டு எவ்வாறு உடம்பு மட்டும் பிரிந்துசென்றனரோ அதுபோல், மதிவளர்செல்வி மணாளனைப் பிரிதற்கு வருந்தி மனம் உருகிச் செல்லும்போது வழியில் அபசகுனங்கள் தோன்றின. மயில் வலமாகவும், காகம் இடமாகவும், அரவம் பூனை முதலியன குறுக்காகவும் போகக் கண்டனள். அதனால் ஏதோ ஒரு பெரிய இடையூறு நேரும் என்று எண்ணி ஏங்கினாள். தனக்கு துன்பம் நேர்ந்தாலும் நேர்க. தன் கண்ணினும்இனிய கணவனுக்கு அணுத் துணையும் அல்லல்

நேரக்கூடாதென்று எண்ணி இறைவனை வழுத்தினாள். "ஊழ் வினை பையநுழைந்துவிடும்" என்ற பொய்யாமொழி பொய்யாகுமோ?

மறுநாள், ஆயிரம் விழியுடை அமரர்நாயகன் மாயிருள்விசும்பிடை வைகுமாறுபோல் அபயன் என்ற அரசர் பெருமான் அரசவையில் அரதனமிழைத்த அரியணைமேல் இனிது வீற்றிருந்தான். வரும் பொருளுரைக்கும் மதி மந்திரியரும், அரும்பொருளுணர்த்தும் புலவர்கள் பலரும் புடைசூழ்ந்து பொலிந்தனர். விபுதர் கோமானருகில் வியாழன் விளங்குவதுபோல் அறிவாகரர் அணியுற அரசனருகில் அமர்ந்திருந்தனர். அரசன் புலவர்களை நோக்கி, "அறிஞர்களே! எனக்கோர் ஐயம் ஏற்பட்டுளது; அதனை நீங்கள் போக்கவேண்டும்.

> பிறந்தசையாப் பெற்றியது பேரொளியின் தோற்றத்
> திறந்தெரிந் தோதுவதென் செப்பு.

இதன் கருத்துயாது? நாளைகதிரவன் மேற்கடலில் விழுவதன்முன் கூறவேண்டும். இன்றேல் நும் உடம்பில் தலை நிலை பெறாது" என்று கடுமையாகக் கூறிவிட்டான். சபை கலைந்தது. நலமிகு புலவர் அனைவருந் தத்தம் உறைவிடம் போய் ஆராய்வாராயினர். "பிறந்து அசையாத பொருள் எது? பெரிய ஒளியின் தோற்றத்தை அறிந்து உரைப்பது எது? என்பவை வினாக்கள்: இவற்றிற்கு விடையாது? ஒன்றும் விளங்கவில்லையே" என்றும் எல்லோரும் திகைத்தார்கள். தனித்திருந்தும் சிந்தித்தார்கள். ஒருவரை யொருவர் கலந்தும் ஆ ந்தார்கள். விடை காணாமல் விழித்தார்கள். நாளை நம் தலை பே குமே! அருள் நலம் மிகுந்த நம் மரசன் இவ்வளவு கடுமையா விதித்துவிட்டாரே? என் செய்வோம். நாளை இங்கிருந்து உயிரைவிடுவதா? அல்லது ஊரைவிடுவதா? ஊரைவிடுவதேநலம்" என்று எண்ணித் துணிந்து புலவர் யாவருங்கூடி அன்றிரவு அவ்வூரை விட்டு அகன்று நீங்கினர்.

ஆனால் அறிவாகரர்மட்டும் அகன்றாரில்லை. மதிநுட்பம் வாய்ந்த அவருக்கும் அவ்வினாவுக்கு விடை புலப்படவில்லை. உள்ளம் சுழன்றது. கள்ளம் அறியாத அவர் மற்றவர்களைப்போல ஓடிப்போவதற்கு உடன்படவில்லை. "நாளை மாலை இறைவனிடத்தே "விளங்கவில்லை" என்றுகூறி வருவதை வரவேற்று அநுபவிப்போம்" என்று எண்ணி இருந்தார். அடுத்தநாள் மாலை

யடைந்தது. கதிரவன் மேற்கடலின் அருகில் சாய்கின்முன். அறிவாகரர் "நமது ஆயுளும் சாய்ந்தது" என்று எண்ணி, அறிவுடையோராதலினுல் கவற்சியடையாமல் மன்னன் மாப்பேரவையடைந்து பார்த்திபனைப் பணிந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார்.

அரசன்:— நாவலர் நாயகமே! வாருங்கள். மற்றைய புலவர்கள் எங்கே?

அறிவா:— மன்னர்பெருமானே! அவர்கள் எங்குற்றனரோ அறியேன்.

அரசன்:— (புலவர்கள் இரவே மறைந்தகன்றதை உணர்ந்து கொண்டாளுதலின் புன்முறுவல் பூத்து) ஐயா! நான் கேட்ட கேள்விக்குப் பதில்கூறலாமா?

அறிவா:— அரசே! எவற்றையும் விரைவில் உணரும் என் அறிவுக்குப் புலப்படவில்லை; விதிவசமோ? அல்லது மதிமயலோ? அறியேன்;

அரசன்:— ஆனுல் தாங்கள் உயிரை வெறுத்துத்தான் வந்திருக்கின்றீரோ?

அறிவா:— வேந்தே! நான் உயிரை இன்று மட்டும் வெறுத்தேனில்லை. என்றும் வெறுத்தே வாழ்கின்றேன். "எல்லாம் என்னையாளும் ஈசன் செயல்"

அரசன்:— புலன்வழியேகாப்புலவரே! நாளை மாலை ஆறு மணிக்குச் சிரச்சேதம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

அறிவா:— மிக்க மகிழ்ச்சி.

சபை கலைந்தது. ஊரெங்கும் கலக்கம்; அறிவாகரர் மரணத்தைக் குறித்து வருந்தாதாரில்லை. "அரசரோ அருளாளர். அவர் அருளின்றி இங்ஙனம் விதித்தது அதிசயமே? என்னகுறிப்பில் இங்ஙனம் விதித்தனரோ? அறிவாகரர் பரமசாந்தசீலர்; கல்வி அறிவு ஒழுக்கம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவர். அவருடைய பிரிவு அறிவியல் உலகிற்கே ஒரு பெரிய நஷ்டம்; திருவருள் என்ன நினைத்திருக்கின்றதோ" என்று ஊரில் பலர் பலப்பல பகர்ந்து பதறினர்; கதறினர்.

அபயமன்னர், அறிவாகரர் ஆவி நாளை மாலை பிரிக்கப்படும் என்பதை அவருடைய அருமை மனைவியாருக்கு இரகசியமாகச் செய்தியனுப்பினர். அதுகேட்ட அந்த அம்மை இடியேறுண்ட நாகம்போல் நடுநடுங்கி, அலமந்து, "அந்தோ! என் விதிவசம்

இப்படி இருக்குமென்று நான் இம்மியும் எண்ணவில்லையே! முருகா! மூவர்முதல்வா! முக்கண்ணன் புதல்வா! நின் திருவருளைத் தவிர வேறு தாரகமில்லை; என் கணவனைக் காப்பாற்றியருள்வீர்; ஞானபண்டித! புலவர்களுக்கெல்லாம் தலைவர் தேவரீரல்லவா? சங்கப்புலவர் கலகந்தீர்த்த சதுர! இனம் இனத்தைக் காக்குமல்லவா? புலவர் மணியாம் என் கணவரது இடரைப் புலவர் வேந்தாகிய தேவரீரே நீக்கியருளும்'' என்று புலம்பி, உடனே கண்ணீரால் வழியை நனைத்துக் கொண்டு செல்வபுரி சேர்ந்தார். அவர் வந்த சமயம் மறுநாள் மாலை; அறிவாகரரை அவையில் ஏற்றியுள்ளது. இன்னும் அரை நாழிகையில் அவர் தலையை வாங்குவதாக ஏற்பாடு; ஆனால் அரசர் முகத்தில் யாரோ ஒருவருடைய வரவை எதிர்பார்த்திருப்பது போன்ற குறிப்பு தோன்றிக்கொண்டிருந்தது.

தேவர் கூட்டத்தில் வாணிதேவி தோன்றுவதுபோல் மதிவளர் செல்வி ''அவலம் ஈதென எழுதிய வடிவம் ஒத்து'' வந்து அரசனைத் தொழுதார். எல்லோரும் அந்த உத்தமியை இமை கொட்டாமல் பார்க்கலுற்றனர்.

மதிவளர்செல்வி:— மன்னரேறே! கருணைக்கடலே! என் கணவருக்கு இங்ஙனம் கடுமையாகக் கட்டளையிடக் காரணம் யாது?

மன்னன்:— அம்மா! நான் புலவர்கள் அனைவருக்கும் பொதுவாக ஒரு வினைவை எழுப்பினேன். விடைபகரவில்லையேல் தலை நிலைபெறாதென்றேன். மற்றைய புலவர்கள் மறைந்தொழிந்தனர். நின் கணவர் ஒருவரே எஞ்சி நின்றனர். அவரும் விடை பகராது விழித்தனர். ஆதலினால் நான் கூறியபடி இப்போது அவருடைய தலை கொய்யப்படும்.

மதிவளர்:— ஆழி கலங்கினுங் கலங்காத அரசரே! நன்று. அவ்வினா யாது? விளம்புவீர். யான் விடை பகர்வேன்.

மன்னன்:— (புன்னகை புரிந்து) (அது சமயம் சபையில் ஒரு ஆரவாரமும் ஏற்பட்டது) பொன்னை நிகர்த்த அன்னையே! உவகை யுறுகிறேன்.

பிறந் தசையாப் பெற்றியது பேரொளியின் தோற்றத்
திறந் தெரிந் தோதுவதென் செப்பு.

இதற்கு விடைபகர வேண்டும்,

மதிவளர்:— தண்ணளி நிறைந்த புண்ணியரே! இதற்கு விடை நான் கூறுகின்றேன். "பிறந்து அசையாப் பெற்றியது" முட்டை. இங்கே சிறப்பாகக் கோழிமுட்டையைக் குறிக்கின்றது. மற்றையவை பிறந்தவுடன் அசையுந் தன்மையுடையவை. முட்டை ஒன்றுதான் பிறந்தும் அசையுந் தன்மையின்றி யிருப்பது. "பேர் ஒளியின் தோற்றத் திறந் தெரிந்து ஓதுவது" சேவல். சூரியன் ஒருவனே ஒளிகட்கெல்லாம் பெரியஒளி; கதிரவன் உதயத்தை உணர்ந்து உலகிற்கு உணர்த்துவது சேவல் ஒன்றே. ஆதலினுலேதான் அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான பாநுவாகிய செவ்வேட் பரமன் சேவற் கொடியை ஏந்தி யுள்ளனர்.

என்று மதிநுட்பத்தால் அதிநுட்பமான அவ்வினுக்களுக்கு விரைவில் விடை பகர்ந்தனர். சபையில் கரக்கம்பமும் சிரக்கம்பமும் உண்டாயிற்று. கலகலவென்று ஆரவாரமும், "சரிசரி" என்ற சொற்களும் இடைவிடாமல் சில நிமிஷங்கள்வரை முழங்கின. அறிவாகரரும் தன் மனைவியின் நுண்ணிய அறிவைப் பாராட்டி உள்ளம் உவந்தனர்; புண்ணிய உருவம்போல் நிற்கும் அப் புனிதவதியின் புத்தியின் கூர்மையை மன்னன் மனமார மகிழ்ந்து பாராட்டினன்.

மன்னன்:— செம்மைப் பண்புடைய அம்மையே! உமது அறிவின் திறத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி யுறுகின்றேன். விடை உமது கணவர் கூறவில்லை. ஆதலினுல் நான் முன் இட்ட விதிப்படி அவருக்கு மரணவிதி இப்போது நிகழ இருக்கின்றது. ஆனுல், தாங்கள் வியக்குமாறு விடை பகர்ந்தீர். அதனைக் குறித்து இப்போது நான் ஒரு தீர்மானம் செய்கிறேன். உமது கணவர் தலையை வாங்குவதாக திட்டம் போட்டதை மாற்ற முடியாது. அம்மா! உங்கள் விடை எனக்கு மகிழ்ச்சியை யளித்தது. தங்களுக்கு இப்போது வரந்தருகின்றேன். தங்கள் கணவர் மரணதண்டனையைத் தவிர்க்குமாறு நீங்கள்கேட்கக் கூடாது. அந்த வரமாவது, தங்கள் கணவருக்கு எந்த வகையில் மரணத்தை விதிக்கட்டும்; சிரச்சேதம், தூக்கிடுதல், நஞ்சூட்டுதல், ஆனையின் காலால் இடறுதல் முதலிய பலவகையால் மரணத்தை விதிக்கலாம்; இந்த வகையிலாவது, இன்னும் தங்கட்கு விருப்பமான வகையிலாவது மரணத்தை

உ

முருகா.

# திருக்குறள்

மெய்யன்பர்களே!

எல்லா தேசத்தாரும், எல்லா நாட்டாரும், எல்லா நிறத்தாரும், எல்லா சமயத்தாரும், எல்லா காலத்தாரும், கருத்து வேறுபாடின்றி ஒப்பமுடிந்த

---

விதிக்கின்றேன். தாங்கள் விரும்புகின்ற வகையில் அவருக்கு மரணத்தை விதிப்பேன். ஆய்ந்து கூறும்.

மதிவளர்:— அரசரேறே! மிக்க மகிழ்ச்சியே. எனது அருமைக் கணவருக்கு மரணதண்டனையை மாற்றமுடியாதென்றும், நான் விடை பகர்ந்ததற்காக நான் கூறும் வகையில் மரணத்தை விதிப்பதாகவும் கூறினீர். மன்னரே! நான் கூறும் வகையில் மரணத்தை விதிக்கவேண்டும். அதில் ஒன்றும் தடையிருக்காதே?

மன்னன்:— அம்மா! தடையிருக்காது. மரணம் நீர் கூறும் வகையில் விதிக்கின்றேன்.

மதிவளர்:— வாய்மை தவறாத வள்ளலே! என் கணவருக்குக் கிழத்தன்மையால் மரணம் உண்டாக வேண்டும்.

(சபையில் ஒரே கரமுழக்கம் உண்டாயிற்று.)

மன்னன்:— (மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து) அம்மா! உனது மதிநுட்பத்தை ஆய்ந்தறியும் பொருட்டே இங்ஙனம் செய்தேன். அங்ஙனமே உமது கணவருக்குக் கிழத்தனத்தால் மரணம் விதிக்கப்பட்டது.

பிறகு மன்னன் அறிவாகரரை வாழ்த்தி பல ஏக்கர் நிலங்களையும் பொன்னாணயங்களையும் ஆடையாபரணங்களையும் வழங்கி, இருவரையும் தந்தப் பல்லக்கிலேற்றி நகர்வலம் வரச் செய்து பாராட்டினான். மறைந்த புலவர்கள் அனைவரையும் கொணரச்செய்து அவர்கட்கு அவ்வம்மையின் அறிவின் திறத்தை வெளிப்படுத்தும் பொருட்டே இதனைச் செய்தேன் என்றுகூறி அவர்கட்கெல்லாம் நலங்கள் பல செய்தான்.

சத்தியவானைச் சாவித்திரி கூற்றுவனிடமிருந்து மீட்டது போல் அறிவாகரரை மதிவளர்செல்வி மரணத்தினின்று மீட்டுக் கணவனுடன் நீடுவாழ்ந்து இன்புற்றனள்.

உண்மைவேதம் நமது திருக்குறள் ஒன்றேயாம். உலகிலுள்ள எல்லா அறங்களையும் தன்னகத்தே கொண்டு சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது திருக்குறள் ஒரு குலத்துக்கொரு நீதி, மற்றொரு குலத்துக்கொரு நீதி என்று கூறும் மநுவாதி யறநூல்களெல்லாம் வள்ளுவருடைய அறநூலைக் கண்டு வாயிழந்து ஒளிமழுங்கி நாணி தலைகவிழ்ந்து மறைந்தொழிந்தன. திருமால் குறள்வடிவு கொண்டு இரண்டடியால் மூவுலகையும் அளந்தனர். வள்ளுவர் தமது குறளின் இரண்டடியால் எல்லா உலகங்களையும் அளந்துவிட்டனர். திருக்குறள் ஓதுவதற்கு எளிது; மனப்பாடஞ் செய்வதும் சுலபம்; ஒருவிசை படித்தாலேயே போதும். உணர்தற்கு அரிது; வேதங்களிலுள்ள விழுப்பொருள்களை யெல்லாம் விளக்கமாக உரைப்பது. நினைக்குந்தோறும் நெஞ்சில் தெவிட்டாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்வது. இதன் பெருமையை நன்குணர்ந்த மாங்குடி மருதனார்,

> ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
> வேதப் பொருளாய் மிகவிளங்கித் —தீதற்றோர்
> உள்ளுதொ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு. என்றனர்.

அன்பர்களே! கடல் தண்ணீர் வற்றிவிட்டாலும், சூரியன் தட்பத்தை யடைந்தாலும், சந்திரன் வெப்பத்தை யடைந்தாலும் திருக்குறள் தனது பெருமையினின்றும் குறையாது. செய்யாமொழி யென்னும் வடமொழி வேதத்தினும் பொய்யாமொழியாகிய இத் தமிழ் மறையே சாலவும் சிறந்தது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி. என்பது நம் நாட்டுப் பழமொழி. நால் என்பது நாலடியார்; இரண்டு என்பது திருக்குறள். ஆதலால், திருக்குறளைப் போல் அறத்தின் நுட்பங்களை வரையறுத்துக் கூறும் நூல் முன்னுமில்லை; இனி பின்னுமில்லை. திருக்குறளை எடுத்துப் பொன்போலத் தத்தம் நூல்களில் அமைத்துப் பாடாத புலவர் பெருமக்களில்லை. உதாரணமாக ஒன்றைக் காட்டுகின்றேன். (தொடரும்)

(ப—ரை.)

| | |
|---|---|
| நதிபுத்திர | – கங்கைநதியின் குமாரனே; |
| ஞானசுகாதிப | – (மக்கள் தங்கள் பிறவித்துன்பத்தினின்று நீங்கி நினது திருவடியனுபூதி யடைதற்கு அவர்களுக்கு) மெய்யறிவும் அதினால் பேரின்பமும் (அருளி அவர்களைக் காத்தருளுகின்ற) தலைவனே; |
| அத் திதிபுத்திரர் | – அந்தத் திதியின் மைந்தர்களாகிய (அசுரர்களுடைய) |
| வீறு சேவகனே | – ஆணவமலச் செருக்கை (அவர்களைப் போரில் எதிர்த்து வெல்லுதலால்) அழித்த வீரனே; |
| மதிகெட்டு | – (நான் முன்னடைந்திருந்த) மெய்யறிவை யிழந்து, |
| மயங்கி | – (உலக வாழ்வுக்குரிய செல்வத்தையும் புகழையும் பெரிதாக நினைத்து அவற்றைத் தேடிப்பெறுதலில்) மயக்க அறிவு உடையவனாகி, |
| அறவாடி | – (அதனால்) மிகவும் மனம் வருந்தி; |
| அறக்கதிகெட்டு | – அறநெறியில் நேர்மையாய் ஒழுகி, அதனால் அடையப்பெறும் நினது திருவடி யனுபூதியை யிழந்து; |
| அவமே கெடவோ கடவேன் | – வீணாக (நான்பெற்ற மானிடப் பிறவியின் பயனை) யிழத்தற்கு உரியவனாவேனோ? |

(அதாவது பிறவிப்பயனை இழந்துபோகாமல் நின் திருவடி யனுபூதியை யடைதல் வேண்டும்) நினது திருவடி யனுபூதியை நான் இப்பிறவியிலே பெறுதற்குரியவனாகும்படி அதற்கு சாதனமாகிய தெளிவான மெய்யறிவை நான் இழந்துபோகாமலிருக்கும்படி செய்து என்னைக் காத்தருள வேண்டுமென்பது குறிப்பெச்சம்.

(வி—ரை.)

சிவபெருமானுடைய ஆறு நெற்றிக் கண்களினின்றும் எழுந்த ஞானத்தீச்சுடர்களை கங்காதேவி சரவணப் பொய்கையில் கொண்டுபோய்விட்டு அங்கே முருகக் கடவுள் வளர்ந்ததினாலே அவனை 'நதி புத்திர' என்றார். 'நதி' யென்பது சிவசத்தியால் அதிட்டிக்கப்பட்டு இயங்குகிற கங்காதேவியைக் குறிக்கிறது. கங்காதேவியை முருகனுடைய வளர்ப்புத் தாயாக ஆசிரியர் இங்கே கூறினார். 34-வது பாட்டில் முருகக்கடவுளை ஆசிரியர் கங்காநதிபால என்றார். ஞானம் என்பதிங்கே துரியாதீத நிலையிலுள்ள மெய்யறிவைக் குறிக்கிறது. இந்த மெய்யறிவு ஒருவர் முருகக் கடவுளோடு அத்துவிதமாய் (இரண்டற) ஒற்றுமைப்பட்டு நிற்பதினாலுண்டாகின்றது. இது மெய்யுணர்வு என்றும், பதிஞானம் என்றும், உள்ளறிவு என்றும், உள்ளுணர்வு என்றும், சித்தாந்த நூல்களிற் கூறப்படுகின்றது. சுகமென்பது இந்த மெய்யறிவினால் அடையப்பெறும் பேரின்பம். இந்தப் பேரின்பம் அநுபூதியென்றும், திருவடி யநுபூதி என்றும் கூறப்படும். முருகன் மக்களுடைய உள்ளத்தினின்றுணர்த்தி பக்குவப்படுத்தி அவர்களை மேலான மெய்யறிவை அடையும்படி செய்து, அவர்களுக்குத் தான் தலைவன் என்ற நிலைமையில், தனது திருவடியநுபூதி (பேரின்பம்) அளித்ததலால் அவனை 'ஞான சுகாதிப' என்று ஆசிரியர் விளித்தார். திதி என்பவள் காசிபமுனிவனுடைய மனைவி. அவன் திதியைச் சேர்ந்து அசுரர்களைப் பிள்ளைகளாகப் பெற்றமையால் அவர்களைத் 'திதிபுத்திரர்' என்றார். அசுரர்கள் திதிபுத்திரர்களாக யிருத்தலால் அவர்களுக்குத் தைத்தியரென்ற பெயரும் வந்தது. திதிக்கு முன்னுள்ள அகரமென்ற அடைமொழி அறிசுட்டுப் பெயராய் பிரசித்தப் பொருளைக் குறிக்கிறது. இந்நிலவுலகம் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள போராட்

டம் (Struggle) நிகழ்வதால் உளதாதல்போல, வானுலகமும் நன்மைக் கறிகுறியாயுள்ள தேவர்கட்கும், தீமைக்கு அறிகுறியாயுள்ள அசுரர்கட்கும் உள்ள போராட்டத்தால் விளங்குகிறது. பொதுவாக, தேவர்கள் முருகனுடைய அருளைச் சார்ந்தும், அசுரர்கள் மலத்தைச் சார்ந்தும் ஒழுகுகிறவர்கள். புறத்தில் இப் போராட்டம் நிகழ்வதுபோல மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், அருட்சார்வைப் பற்றியும், மலச்சார்வைப் பற்றியும் போராட்டம் நிகழ்ந்து அதன் பயனாக அவர்களிடத்தில் முறையே அறவொழுக்கமும், மறவொழுக்கமும் உண்டாகின்றன. ஒருவர் 'இந்தப் போராட்டத்தில் முருகனுடைய அருளைச் சார்ந்து அவன் உண்ணின்றுணர்த்துகிறபடி அருள்வழித்தாகிய அறவொழுக்கத்திற்றலை நின்று ஒழுகுவாரானால், அவனருளால் அவர் மும்மலங்களையும் வென்று முருகனுடைய திருவடி அனுபூதியைப் பெறுதற்குரியராவர். ஆதலின் முருகனை ஆசிரியர் அத்திபுத்திர வீறடு சேவகனே என்றார். சூரபன்மன் முதலிய அசுரர்களை வென்று தேவர்களை அசுரர்களுடைய சிறையினின்று மீட்டி அவர்களைக் காப்பதற்காகவே இறைவனுணையால் திருவவதாரஞ் செய்த முருகக்கடவுள் தன்னை அன்போடு வழிபடுகிறவர்களுடைய மும்மலங்களாகிய சிறையினின்று மீட்டுப் பேரின்பம் அளித்துக் காத்தருளுவனாதலின் அவனை 'ஞானசுகாதிப' என்று ஆசிரியர் விளித்ததன்பின், 'அத்திபுத்திர வீறடு சேவகனே' என்றும் விளித்தார். வீறு என்பது மலச்சார்பினுலுண்டாகிய செறுக்கைக் குறிக்கிறது. மதி என்பது அறிவு; அது இங்கே வீட்டின்பத்துக்குச் சாதனமாயுள்ள மெய்யறிவை உணர்த்துகிறது.

"மலக்கலப்பாலே மறைந்தது சத்தி
மலக்கலப்பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப்பாலே மறைந்தனன் குரு
மலக்கலப்பற்றுன் மதியொளியாமே." தி. ம. 2213.

இப்பாட்டு 4-வது வரியில் மதி என்ற சொல் இப் பொருளுணர்த்துதல் காண்க.

கெடுதல்-இழத்தல். மதிகெட்டு என்றதனால் முன்னொரு காலம் மெய்யறிவுடையவரா யிருந்து பின் அதனை தனக்குண்டான உலகவாதனை காரணமாக இழந்த அடியார் நிலையை ஆசிரியர் தமது மனதில்நினைந்து அதனைத் தம்மேல் வைத்துக் கூறுகின்றார். வீட்டுநெறியில் அருட்குரவன் அறிவுறுத்திய உபதேச மொழிகளைக்கேட்ட ஒருவருக்கு, கேட்டல் ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டை ஞானம் என்னும் நான்குவகை ஞானங்களாகிய மெய்யறிவு முறையே ஒன்றன்பின் ஒன்று உண்டாகின்றன. மூன்றாவது தெளிதல் ஞானமாகிய மெய்யறிவு அடையாத ஒருவர் உலக வாதனை பற்றி மீண்டும் உலகவாழ்வில் மயங்கி வருந்துதல் கூடுமாதலின் 'மதிகெட்டறவாடி மயங்கி' என்றார். இந்தத் தெளிதல் ஞானம் இல்லாதவரைப்பற்றி திருமூலர்,

"தெளிவறியாதார் சிவனையறியார்
தெளிவறியாதார் சீவனுமாகார்
தெளிவறியாதார் சிவமாகமாட்டார்
தெளிவறியாதார் தீரார்பிறப்பே" (தி. ம. 1480)

என்று கூறுகின்றார். வீட்டுநெறியிற் சென்ற ஒருவர் மீண்டும் உலகநெறியில் உலக வாழ்வினால் மயங்கி அடைகின்ற துன்பம் முன்னைய துன்பத்தினும் மிக்கதாயிருத்தலின் "அறவாடி" என்றார்.

'கதி' என்ற வடமொழிச்சொல் வீடுபேறு என்று பொருள்படும். அறக்கதி யெனபது ஒருவர் தாம்ஒழுகும் அறவொழுக்கத்தால் அடையப் பெறும் வீட்டின்பப்பேறு. திருவள்ளுவர் தமது திருக்குறள் நூலிற் கூறுகிறபடி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப பொருள்களில், அறம், பொருள், இன்பம்,மூன்றும் மக்கள் தங்கள் பலபிறப்புகளின்

இடையிலே அடையப்பெறும் உறுதிப் பொருள்களாகவும், வீடு, வாழ்நாள் முடிவில் அடையப்பெறும் முடிவான உறுதிப் பொருளாகவும் உள்ளன. மக்கள் வாழ்நாள் இடையில் அடையப்பெறும் இன்பம், இம்மையின்பமும் துறக்க இன்பமுமாகும். வாழ்நாள் முடிவில் அடையப்பெறும் இன்பம், வீட்டின்பமாகும். இம்மூவகை யின்பங்களுள் இம்மையின்பமானது ஒருவர் தாம் பிற உயிருக்குத் துன்பம் உண்டாகாமல், இன்பம் உண்டாகும்படி அறநெறியில் ஒழுகுவதினால் உண்டாகின்றது. துறக்க இன்பமானது, இம்மையிலே தாம் அறநெறியில் தேடிய பொருளை பிற உயிர்கள் இன்ப மடையும்படி, தம்பயன் குறித்து ஈதலால் மரணத்துக்குப் பின் உண்டாகின்றது. இவ்வுண்மையைத் திருவள்ளுவர்,

> ''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
> வைத்திழக்கும் வன்கணவர்''

என்று கூறியுள்ளார். இம்மையின்பத்தைப் பார்க்கிலும், தம்மின்பத்தை மறுத்துச் செய்யும் அறத்தினாலுண்டாகும், துறக்க இன்பமானது, அளவிலும், குணத்திலும் மிக்கதாகும். ''அறம்பல் எவ்வண்ணம், அவ்வண்ணம் இன்பம்'' என்று திருமூலர் திருமந்திரம் 302-வது பாட்டில், அறத்தினளவுக்கும் குணத்துக்கும் தக்கவாறு ஒருவருக்கு இன்பமுண்டாகுமென்று கூறியதை நோக்குக. ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாயுள்ள இவ்விருவகை யின்பங்களும், மறவொழுக்கத்தை நீக்கி அருள்வழித்தாய அறவொழுக்கத்திலொழுகும் பாகுபாட்டுணர்வினா லுண்டாகின்றன. பலபிறப்பு வாழ்நாள் முடிவிலடையப்பெறும் வீட்டின்பமானது இம்மை மறுமை யின்பங்களின் தொடர்ச்சியாய் ஒருவர் உள்ளத்தின்கண்ணுள்ள அறிவு நிலையில் அறம் மறம் என்ற பாகுபாட்டுணர்வு சிறிதுமின்றி. தம்பயன் சிறிதும்

குறியாது, நேரே அருள்வழியில் ஒழுகும் மேலான அறமா கிய மெய்ஞ்ஞான ஒழுக்கத்தினு லுண்டாகின்றது. இங்ஙனம் வீட்டின்பத்துக்கு காரணமாகிய ஒழுக்க வகையாலும், காரியமாகிய இன்ப வகையாலும் அறவொழுக்கமே சாதன மாயிருத்தலின் வீட்டின்பத்தை 'அறக்கதி' யென்று ஆசிரி யர் கூறினர். இம்மையில் நிலஉலக இன்பத்துக்கும் மறுமை யில் துறக்க இன்பத்துக்கும் காரணமாயிருக்கிற அறச் செம்மை ஒழுக்கத்தைப் பற்றியும், அந்த அறச்செம்மை ஒழுக்கம் வீட்டின்பத்துக்குக் காரணமாகிய அருட்செம்மை ஒழுக்கமாய் வளர்ந்து பெருகுதலைப்பற்றியும் நான் 25-வது பாட்டின்கீழ் எழுதியிருக்கிற விரிஉரையை ஓதி அறவொழுக் கமே வீட்டின்பத்துக்குக் காரணமாயிருத்தலை யறிக. கதி கெடுதலானது, அடைந்திருந்த மெய்யறிவை மேலே கூறிய படி இழத்தலினுலே, அம் மெய்யறிவு முறுகி வளர்ந்து உண ரும் தெளிவு மெய்யறிவினு லடையப்பெறும் பேரின்பத்தை இழத்தலாகும். கதியைப்பெற்றபின் அதனை இழத்தலன்று. அது சித்தாந்த உண்மைக்கு மாறுதலின் 'கெடவோ கட வேன்' என்ற வினு கெடக்கடவேனல்லேன் என்ற பொருளை உணர்த்துகிறது. அதாவது நீ ஞானசுகாதிபன் ஆதலின், அறக்கதி பெறுதற்கு உரியவனுகும்படி நீ கருணைசெய்தல் வேண்டும் என்பது கருத்து. இந்தப் பாட்டில் ஆசிரியர் உலகநெறியை விடுத்து வீட்டுநெறியில் ஒழுகும் அடியார் ஒருவர்தாம் தெளிவு மெய்யறிவு அடைதற்குமுன் பழைய உலகவாழ்வு விருப்பமுடையவராய் வீட்டுநெறியினின்றும் உலகநெறியில் நழுவிய நிலையை தமது நிலையாக வைத்து அவருக்கு எச்சரிக்கையாக அறிவுரை கூறுகின்றூர். இதனுல் "வீட்டுநெறியில் முருகன் திருவடி அனுபூதியை விரும்பித் தவம்செய்யும் அடியார்களே! மலசத்தியானது நீங்கள் நிற் கிற நிலையிலிருந்து நழுவும்படி, கீழேயிழுக்க முயன்று கொண்டே யிருக்கிறது. உங்கள் உள்ளம், முருகனுடைய

அருளை, எப்பொழுதும் மறவாமல் அதில் உறைத்து நிற்க வில்லையானால், உங்களை, மலசத்தியானது கீழே இழுத்து, உலக வாழ்வில் மீண்டும் மயங்கும்படிசெய்து, முருகன் திருவடி அனுபூதியை இழக்கும்படி செய்யும். விழிப்பா யிருங்கள்" என்று ஆசிரியர் அவர்களுக்கு இந்தப் பாட்டில் எச்சரிக்கை கூறியவாறாயிற்று.

(51) உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

(ப—ரை.)

குகனே - மக்களுடைய உள்ளத்தில் வீற்றிருக்கின்ற முருகக்கடவுளே!

உருவாய் - (தடத்த இலக்கணமாகிய பொது இயல்பு நிலையில், அண்டமாகிய உலகில், மண்நீர் என்னும் தூலபூதங்களில்) உருவமாய் விளங்குகிறவனும்,

{ உருஅருவாய் - தீயாகிய தூல சூக்குமபூதத்தில், உரு அரு வாய் விளங்குகிறவனும் }

அருவாய் - (வளி, வான், என்னும் சூக்கும பூதங் களில்) அருவாய் விளங்குகிறவனும்

உளதாய் - (கருதல்) அளவையால் அனுமானப் பிர மாணத்தால், உண்மையை அறியவல்ல வர்கள் நின்னை வழிபடுதற்கு, நீ அத்தூல, தூலசூக்கும, சூக்குமபூதங்களி லிருக்கிற பொருளாக (அறியப்படுகிறவனும்)

இலதாய் - (அவ்வாறு அறியும் ஆற்றலில்லாதவர் களுக்கு, நீ அத்தூல, தூலசூக்கும, சூக்கும

பூதங்களில்) இல்லாத பொருளாய் (அறி யப் படுகிறவனும்)

மலராய் மருவாய் - அவ்வாறு நின்னை யறிந்து வழிபடுகிறவர் கட்கு தூல, தூலசூக்கும; சூக்கும பூதங் களாய் விளங்குவதன்றி, அவைகளின் காரணமாயுள்ள, நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்னும் சூக்கும பூதங்களா யும், விளங்குதலால், மலராயும், அம்மலரி லுள்ள மணமாயும் விளங்குகிறவனும்,

மணியாய் ஒளியாய் - ஒன்பதுவகை மணிகளாயும், அம்மணிகளி லுள்ள ஒளிகளாயும் விளங்குகிறவனும்,

கருவாய் - மேலே கூறியபடி அண்டத்தில் தூலபூதங் களாயும், தூலசூக்கும பூதங்களாயும், சூக் கும பூதங்களாயும் விளங்குவதுமன்றி, பிண்டத்தில் அவைகளா லாக்கப்பட்ட மக்கள் உடலில் வியாபித்து, அதனை யியக்குகின்றவனும்,

உயிராய் - அவ்வுடலிலுள்ள உயிரில் வியாபித்து அதனை யியக்குதலும் அறிவித்தலும் செய் கின்றவனும்

விதியாய் - (இவ்வாறு மக்களை யியக்குதலும் அறி வித்தலும் அவர்கள் அறத்தின்வழி ஒழுகும் படி செய்தற்கு ஆதலால்) அறநெறியாய் விளங்குகிறவனும்,

கதியாய் - (அவ்வாறு மக்கள் அறத்தின்வழி ஒழுகுத லால் விளையும் பயனாகிய) இம்மை. மறுமை இன்பமாய் விளங்குகிறவனும்,

குருவாய் வருவாய் - இவ்வாறெல்லாம் அவர்களுடைய பல பிறவி உலகவாழ்வக்குரிய, பொது இயல்பு நிலையில், நலஞ்செய்தலினாலே அவர்கள் இருவினையொப்புப்பருவம் அடைந்த பொழுது அவர்கள் முன்னே மானுட வடி வில் நோய் உபதேச குருவாகவந்து;

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**
**பட்டு-சேலே தினுசுகள்**
**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**


உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்


**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**
**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---


நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.



லோக்கல் ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "செமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப்படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

## "செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். 1-க்கு 1—0—0. பேசரி சைஸ் வைரம். 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

## மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. M. A.